ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2155/5 - 2019 දෙසැම්බර් මස 23 වැනි සඳුදා - 2019.12.23
2155/5 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: J/DS/2/9/4/16-2016.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல.: 4-3/ 9/ 2017/ WS/70.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

| | |
|---|---|
| ஆரம்ப வரைபட இல. | : YA/JFF/2017/114 பிபியா 2947 |
| கிராமம் | : வண்ணார்பண்ணை மேற்கு |
| கிராம அலுவலர் பிரிவு | : J/88, புதிய சோனகத் தெரு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : யாழ்ப்பாணம் |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : வடக்கு மாகாணம் |
| நோக்கம் | : கழிவு நீரிறைக்கும் சாலை இலக்கம் 25 இனை நிர்மாணிப்பதற்காக. |

**துண்டு இல. 1**

காணியின் பெயர் : குறுதுபிடிங்கி வயல், வரிமதிப்பீட்டு இல. 8 (பகுதி) அராலிவீதி; விபரம்:தோட்டமும் அத்திவாரமும்; உரிமை கோருபவர்: நடராசா நவராஜனுடைய மனைவி நவமணி வசந்தினி; விஸ்தீரணம்: 0.0688 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு தை மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். சுதர்சன்,
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்,
2019, திசெம்பர் 18.

01 - 294